


10.10.2026

தலைப்புச் செய்திகள்

- சுய சார்பு பாரத பாதையில் முப்படையினர் ஆக்கப்பூர்வமான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெறுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
- மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும் என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.
- மகாளய அமாவாசை இன்று பக்திசிரத்தையுடன் கடைபிடிக்கப்படுகிறது.
- காவிரி விவகாரத்தில் தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.
- மின்சாரத்திற்கு அதிக விலைகொடுப்பதால் தமிழகத்தின் நிதிநிலை பாதிப்புக்கு உள்ளாகும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

**********

ராஜ்நாத்சிங்

சுய சார்பு பாரதத்தின் கீழ் முப்படையினர் ஆக்கப்பூர்வமான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெறுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

ஜோத்பூர் விமான படை தளத்தில் பன்னாட்டு வான் சாகச பயிற்சி நிகழ்வில் இன்று உரையாற்றிய அமைச்சர், நம் தேசத்தின் திறன் கட்டமைப்பு நடவடிக்கைகள், நம்பகதன்மை கொண்ட நாடுகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தேவைப்படும் தருணத்தில் தனித்துவமாக செயல்படும் திறனை நாம் பெற்றிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

அதேவேளையில் தேச நலன் மற்றும் உரிய பொறுப்புணர்வுடன் பிற நாடுகளுடன் இணைந்து செயல்பட கூடிய ஆற்றலையும் நாம் பெற்றிருக்க வேண்டும் என்றார்.

தரங் சக்தி பயிற்சி, புதுமையான சிந்தனைகளை தோற்றுவிப்பதோடு, புதிய வாய்ப்புகள், புதிய நட்புகள், புதிய பாடங்களுடன், எதிர்கால செயல்திட்டங்களுக்கு வழிகோலுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஜோத்பூர் வானில் பன்னாட்டு விமானங்கள் இந்திய விமானங்களுடன் பறந்து சென்று பயிற்சியில் ஈடுபடுவது குறித்து பெருமிதம் வெளியிட்ட திரு.ராஜ்நாத்சிங் ஒரேவானில்

பல்வேறு அனுபவங்களை இதன் மூலம் பெற முடியம் என்று குறிப்பிட்டார்.

நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ராணுவ ஒத்துழைப்பை முன்னெடுத்து செல்லும் வகையில் பன்னாட்டு வான் சாகச பயிற்சிகள் இதில் இடம்பெற்றன.

**********

உலக மன நல தினம்

உலக மன நல தினம் இன்று கடைபிடிக்கப்படும் நிலையில் மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகள் கிடைப்பதன் அவசியத்தை மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வலியுறுத்தியுள்ளார்.

36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 48 லட்சம் பேருக்கு 53 தொலை மருத்துவ மையங்கள் மூலம் நலம் சார்ந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மனநலம் குன்றியவர்கள் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைகள் எடுப்பது குறித்து இதற்கான மையங்கள் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் அச்சமின்றி சிகிச்சைகளை மேற்கொள்ள ஏதுவாக நமது சமுதாயம் ஆதரவுடனும் பரிவுடனும் திகழ வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

"உண்மையான குரல்கள் உண்மையான மாற்றம்" என்பதை கருப்பொருளாக கொண்டு இந்தாண்டின் மனநல தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி நெல்லையிலிருந்து திருச்செந்தூருக்கு விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் திருநாவுக்கரசு தொடங்கிவைத்தார்.

மனநலம் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி, தன்னார்வலர்கள், மன அழுத்தத்திலிருந்து மீண்டவர்கள், உள்ளிட்டோர் இப்பேரணியில் பங்கேற்றனர்.

விழுப்புரத்தில் நடைபெற்ற பேரணியில் அரசு மருத்துவ கல்லூரி மாணவர்கள் தனியார் செவிலியர் கல்லூரி மாணாக்கர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் போதை பழக்கத்திற்கு ஆளானவர்கள் பெருமளவில் மனநல பாதிப்புக்கு உள்ளாவதால் போதை பொருள் பழக்கம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

**********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நாளை சென்னை வருகிறார்.

14.5 கிலோ மீட்டர் தூர பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில்சேவையை நாளை துவக்கிவைக்கும் அவர், 5 அம்ரித் பாரத்

ரயில் நிலையங்களை காணொலி வாயிலாக தொடங்கிவைக்கிறார்.

இதன்படி புனரமைக்கப்பட்ட பழனி – பரமக்குடி – நாமக்கல் – அம்பாசமுத்திரம் – வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையங்கள் நாளை திறந்துவைக்கப்படுகின்றன.

கோவையில் 700 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில் திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைகக்கிறார்.

போரூர் - பூந்தமல்லி இடையே மெட்ரோ ரயிலில் பிரதமர் பயணம் மேற்கொள்கிறார்.

தமிழக முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய்யும் பிரதமருடன் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

சென்னை இந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தில் மூளை ஆராய்ச்சி மையத்தை பார்வையிடும் பிரதமர், சென்னை வர்த்தக மையத்தில் பல்வேறு நல திட்டங்களை துவக்கிவைக்கிறார்.

இந்தபயணத்தின் ஒருபகுதியாக போரூர் ஏரி அருகே உள்ள ஜலகண்டேஸ்வர திருக்கோவிலில் தரிசனம் மேற்கொள்கிறார்.

பிரதமரின் சென்னை வருகையை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, போக்குவரத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

**********

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்துள்ள நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தின், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, கேலோ இந்தியா குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் நாட்டின் விளையாட்டு துறை ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் முன்னெடுத்து செல்லப்பட்டு தடகள விளையாட்டு வீர வீராங்கனைகள், தேசிய, சர்வதேச போட்டிகளில் எண்ணற்ற பதக்கங்களை குவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அடித்தட்டு நிலையில் உள்ள திறமையானவர்கள் கண்டறியப்பட்டு, பயற்சி அளிக்கப்பட்டு, ஆளுமையுடன் சர்வதேச போட்டிகளில் வெற்றிகளை குவிக்கும் வகையில் நம் நாட்டின் விளையாட்டு சூழல் மேம்படுத்தப்பட்டது.

அண்மையில் முடிவடைந்த ஆசிய விளையாட்டு போட்டிகளில் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி 85 பதக்கங்களை வென்று பதக்க பட்டியலில் இந்தியா 4 ஆவது இடத்திற்கு முன்னேறி சாதனை படைத்தது.

தேசிய விளையாட்டு கொள்கை, தேசிய கல்வி கொள்கை, ஒலிம்பிக் இலக்கு, ஆரோக்கியமான இந்தியா உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு சார்ந்த நடவடிக்கைகள், மூலம் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் மேற்கொள்ளப்படும் சீர்மிகு

விளையாட்டு திட்டங்களில் மாநில அரசுகளும் எழுச்சியுடன் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

. Music ..

**********

மகாளய அமாவாசை

மகாளய அமாவாசை இன்று பக்திசிரத்தையுடன் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட செய்தியில் அனைவரது வாழ்விலும் அமைதி, வளம், மகிழ்ச்சி நம்பிக்கையை இத்தினம் ஏற்படுத்தட்டும் என வாழ்த்தியுள்ளார்.

மகாளய அமாவாசையை ஒட்டி ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரை, முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடல், திருச்செந்தூர் கடற்கரை, சேலம் மேட்டூர் மற்றும் மயிலாடுதுறை காவிரி ஆறு, ஈரோடு பவானி கூடுதுறை, நாகை கோடியக்கரை ஆதி சேது கடற்கரை, வைகை ஆறு, திருச்சி அம்மா மண்டபம் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு நீர்நிலைகளில் ஏராளமானோர் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர்.

திருவையாறு காவிரி ஆற்றின் புஷ்ப மண்டப படித்துறையில் திரளான மக்கள் கூடி மூதாதையர்களுக்கு நேர்த்திகடன் செலுத்தினர்.

நெல்லை தாமிரபரணி நதியில் உள்ள பாபநாசம், உள்ளிட்ட 60 க்கும் மேற்பட்ட தீர்த்த கட்டங்களில் மக்கள் அதிகாலை முதலே தர்ப்பணம் செய்து வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில், முதன்முறை வாக்காளர்கள், பெயர் சேர்ப்பதற்கான சிறப்பு முகாம் இன்று நடைபெறுகிறது.

கடந்த ஒன்றாம் தேதி 18 வயது பூர்த்தியானவர்கள் இம்முகாமில் பங்கேற்று பயனடையுமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

**********

ராமதாஸ்

காவிரி விவகாரத்தில் தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் நிலவும் தண்ணீர் பிரச்சனை, கால நிலை மாற்ற பாதிப்புகள் குறித்தும் அனைத்து கட்சி கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்று கோரினார்.

மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளதாகவும், காவிரி ஒப்பந்தத்தின்படி கர்நாடக அரசு தமிழகத்திற்கான நீரை முழுமையாக வழங்கவில்லை என்றும் கூறியஅவர், இப்பிரச்சனையில் தமிழக அரசு தீவிரமாக செயல்பட்டு மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், தேர்தலின் போது கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் கருத்துக்களை கேட்டே நிலைப்பாடுகள் எடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

**********

ராகுல்காந்தி

மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தி முதலமைச்சர் திரு.விஜய்யின் நீலாங்கரை இல்லத்தில் தற்போது வருகை புரிந்துள்ளார்.

இச்சந்திப்பை தொடர்ந்து இன்றுமாலை சென்னை தீவுத்திடலில் நடைபெறும் மாணாக்கர் சந்திப்பு நிகழ்வில் திரு. ராகுல்காந்தி பங்கேற்க உள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.மாணிக்கம் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

**********

நயினார் நாகேந்திரன்

தமிழ்நாட்டில் இடைத்தேர்தலை கொண்டு வாக்கு சதவிகிதத்தை கணக்கிட முடியாது என்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இடைத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை வரவேற்பதாக கூறினார்.

கடந்த 154 நாட்களில் 200-க்கும் மேற்பட்ட கொலை சம்பவங்களும், பாலியல் வன்கொடுமை சம்பவங்களும் நடைபெற்றுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

மின்வெட்டு, குடிநீர் பற்றாக்குறை, கூட்டுக்குடிநீர் திட்டங்கள் இல்லாமை உள்ளிட்ட பிரச்சனைகளை சுட்டிக்காட்டிய அவர், மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்குவதால் தமிழகத்தின் நிதிநிலைமை எதிர்காலத்தில் மிகவும் மோசமான நிலைக்கு செல்லும் என்று தெரிவித்தார்.

**********

போராட்டம்

திருப்பூர் மாவட்டத்தில் அட்டை பெட்டிகள் தயாரிப்பதற்கான மூலப்பொருள் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரி அதன் உற்பத்தியாளர்கள் இரண்டாவது நாளாக இன்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டம் காரணமாக கோவை மண்டலத்தில் 50 கோடி ரூபாய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துறைமுகம் அருகே கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்காக குழாய் பதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர்கள் கடலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**********

தஞ்சை

தஞ்சை பெரியகோவிலில் மாமன்னர் ராஜராஜ சோழனின் ஆயிரத்து 41ஆவது சதய விழாவை முன்னிட்டு பந்தக்கால் நடும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

சதய விழா வரும் 21, 22ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

**********

தூத்துக்குடி

தூத்துக்குடி முத்தாரம்மன் திருக்கோவில் தசரா திருவிழா நாளை கொடியேற்றத்துடன் தொடங்குவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

யானை

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் யானை தாக்கியதில் கோவையை சேர்ந்த ஒருவர் இன்று உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து காவல்துறையினரும் வனத்துறையினரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**********

வானிலை

கோவை மாவட்ட மலைபகுதிகள், நீலகிரி தேனி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திண்டுக்கல் விருதுநகர், மதுரை சிவகங்கை ராமநாதபுரம் தூத்துக்குடி தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

**********

கால்பந்து

13ஆவது இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டிகள் பெங்களுருவில் இன்று தொடங்குகின்றன.

முதல் போட்டியில் பெங்களுரு FC அணி – SC டெல்லி அணியை எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் சென்னை FC அணி – கோவா FC அணியுடன் மோத உள்ளது.

**********

கிரிக்கெட்

இந்திய வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கிடையிலான 3ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி இந்தோரில் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றுள்ளன.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது